**2018 ஏப்றில் 3 ஆம் திகதி பேராதனைப் பல்கலைக்கழக மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின ஆராய்ச்சி சங்கம் அங்குரார்ப்பணக் கூட்டத்தொடரில் M.A. சுமந்திரன் அவர்கள் ஆற்றிய சிறப்புரை**

பேராதனைப் பல்கலைகட்கழக உபவேந்தர் அவர்களே, கலைப் பீடத் தலைவர் அவர்களே, மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் சங்கைக்குரிய பேராசிரியர் ஞானாநந்த அவர்களே, மகாசங்க உறுப்பினர்களே, என் இனிய நனபர்களே.

எமது நாட்டிற்கு மிகவும் முக்கியமானவையாக அமையும் விடையங்களை ஆராயும் உங்களுடைய பட்டப்பபின்படிப்பு நிறுவகத்தின் ஆராய்ச்சிச் சங்கத் தொடக்க கூட்டமாகிய இதுபோன்றதொரு மிக முக்கியமான கூட்டத்தில் சிறப்புரை ஆற்றுவதற்காக அழைக்கப்பட்டுள்மையையிட்டு எத்துணை மகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன் என்பதை நான் முதலில் கூறுவேனாக. இக்குறிப்பிட்ட தருணத்தில் மாத்திரமின்றி, நீண்டகாலமாகவே இந்த நாட்டில் நடைபெற்ற பெரும்பாலான பேராட்டங்களுக்கு இப்பிரச்சினைகள் காரணமாக இருந்து வருகின்றன. எனவே, இத்துறைகளிலான கல்விசார் ஆராய்ச்சிகள் ஏறத்தாழ 100 வருடங்களாக நாம் இரு துருவங்களாக இருக்கும் நிலையைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்யும் என்று நான் எண்ணுகின்றேன். 100 வருடங்கள் என்று நான் ஏன் கூறுகின்றேன்? ஏனெனில் எனக்குத் தரப்பட்டுள்ள தலைப்பு அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் ஒரு வடபுல கண்ணோட்டத்தில் அரசியலமைப்புத் தயாரித்தல் செயன்முறை பற்றியதாகும். ஒரு வடபுல கண்ணோட்த்திலிருந்து பார்க்கின்றபோது, இந்நடைமுறை ஒரு நூற்றாண்டை எட்டுகிறது என்று எண்ணுகின்றேன்; நாங்கள் இன்னமும் அதற்குத் தீர்வு காணவில்லை.

இந்நடைமுறை தொடங்கிய 1900 களின் ஆரம்ப காலப்பகுதிக்கு, சுதந்திரத்தின்போது மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு அல்லது இப்பிரித்தானிய காலனித்துவ நாட்டிற்கு வேறு வகையான அந்தஸ்து ஆராயபப்பட்டமைமீது - இலங்கை தேசிய காங்கிரஸ் அதனை பின்பற்றியது - எமது கவனத்தைத் திருப்புகிறேன். ஆனால் 1911 ஆம் ஆண்டில்தான் சேர் பொன்னம்பலம் அருனாசலம் “தமிழர் மகா சபை” என்று அழைக்கப்பட்ட தனி இயக்கமொன்றைத் தொடங்கினார். எனவே அங்குதான் இந்த நாட்டின் அரசியல் சமூகத்தில் ஒரு பிரிவினை ஆரம்பமானது. இந்ததத் தீவு எப்போதும் தனியொரு அலகாக இருந்ததில்லை. 1833 இல் கோல்புருக் கெமரோன் சீர்திருத்த ஆலோசனைகளுக்ளுக்குப் பின்னர்தான் நிர்வாக வசதிக்காக இத்தீவு தனியொரு நிர்வாக அலகாக மாற்றப்பட்டது. 1833 வரை அது மூன்று வெவ்வேறு அலகுகளாக நிர்வகிக்கப்பட்டது. 1815 ஆம் ஆண்டு இறுதியாக கண்டி பிரித்தானியருக்கு ஒப்படைக்கப்பட்டதென்பதை கண்டியில் உள்ள நீங்கள் அறிவீர்கள். அதற்கு முன்னர், மற்ற இரண்டு அரசுகளும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு காலனித்துவ ஆக்கிரமிப்பாளர்களிடம் சரணடைந்தன. எனினும், 1815 ஆம் ஆண்டு

பிரித்தானியர் முழு நாட்டையும் கைப்பற்றியபின்னர் இத்தீவு ஒரே அலகாகக நிர்வகிக்கப்படவேண்டுமென பிரித்தானியரினால் தீர்மானிக்கப்பட்டது.

அவர்கள் வேறு விதமான தீர்மானமொன்றை மேற்கொண்டிருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று நான் அடிக்கடி எண்ணியதுண்டு. அவர்கள் இரண்டு வேறுபட்ட தீர்மானங்களை எடுத்திருக்கலாம்: ஒன்று, மூன்று தனித்தனி அலகுகளாக தொடர்வதற்கு அவர்கள் தீர்மானித்திருக்கலாம். அல்லது இலங்கைத் தீவை இந்தியப் பேரரசின் ஒரு பகுதியாக அவர்கள் இணைத்திருக்கலாம். இரண்டும் சாத்தியமாகி இருக்கலாம். இத்தீவை இந்தியாவின் ஓர் அங்கமாக அவர்கள் இணைத்திருந்தால் - நான் அவ்வாறு கூறுவது ஏனெனில், அக்காலப்பகுதியில் இந்தியாவில் நலனைக் கொண்டிருந்தது அதே பிரித்தானிய கம்பனிதான் - கிழக்கிந்திய கம்பனி. இன்று இந்தியாவின் வரை படத்தை நீங்கள் பார்ப்பீர்களாயின், அங்கு இரண்டு தீவுத் தெகுதிகள் உள்ளன - இலங்கைகையவிட இந்தியாவின் கரைக்கு அப்பால் மிகமிகத் தொலைவில் உள்ள நிக்கோபார் மற்றும் அந்தமான் தீவுகள். எனினும் அவை இரண்டும் இந்தியாவின் பகுதிகளாக உள்ளன. ஏன்? ஏனெனில், பிரித்தானியர் அவற்றை இந்தியாவின் பகுதிகளாக ஆளுவதற்குத் தீர்மானித்தனர். ஆனால் இலங்கையை ஒரு தனி அலகாக ஆளுவதற்கு அவர்கள் தீர்மானித்தார்கள். எனவே இத்தீர்மானம் எந்த வழியிலும் சென்றிருக்கலாம் அல்லது கோல்புருக் கெமரோன் ஆலோசனை இல்லாதிருந்தால், அவர்கள் மூன்று தனித்தனி அலகுகளாக தொடர்ந்து ஆண்டிருக்கலாம்.

எனவே, தற்காலத்தில் நாங்கள் ஒரே அலகாக மாறியிருப்பது வரலாற்றின் ஒரு தற்செயல் நிகழ்வு அல்லது சென். ஜேம்ஸ் மன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானத்தின் விளைவு ஆகும். அது அவ்வாறிருக்க, 1926 ஆம் ஆண்டு இலங்கைக்கான ஓர் அரசியலமைப்பு கலந்துரையாடப்பட்டபோது, அதற்கு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திலிருந்து நாடு திரும்பிய எஸ் டப்ளியு. ஆர். டீ. பண்டாரரநாயக்க அவர்களிடமிருந்து ஒரு புதிய கருத்து கிடைத்தது. அப்போது அவர் இலங்கைக்குச் மிகச் சிறந்த அரசியலமைப்பு முறை ஒரு சமஸ்டி ஏற்பாடு தான் என்று வாதிட்டு சிலோன் மோர்னிங் லீடர் பத்திரிகைக்கு 6 கடிதங்கள் எழுதினார். இவ்வாறு வெளிப்படையாக சமஸ்டி எண்ணத்தை முதலில் ஆதரித்தவர் அவர்தான். ஆறு கடிதங்கள். அந்த ஆறு கடிதங்களையும் நான் வாசித்துள்ளேன். கடைசிக் கடிதத்தில் - 5வது கடிதம் என்று நினைக்கிறேன் - அந்த சமஸ்டி ஏற்பாடு சுவிட்சர்லாந்தில் நிலவும் சமஸ்டி முறையாக அமையவேண்டும் என்று அவர் கூறுகின்றார். சுவிட்சர்லாந்து 26 கெண்டோன்கள் அடங்கிய ஒரு கூட்டாட்சி என்பது உங்களுக்குத் தெரியும். சுவிடசர்லாந்தில் வேறு எந்த சமஸ்டி ஏற்பாட்டையும்விட மிக அதிகமாக அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. சிலவேளை கடந்த காலங்களில் USSR அவ்வாறு இருந்திருக்கும். ஆனால் இன்று ஒரு சமஸ்டி ஏற்பாட்டில் அதிகாரம் மிக அதிக அளவில் பகிரப்பட்டிருப்பது

சுவிட்சர்லாந்தில்தான். சுவிஸ் முறைதான் இலங்கைக்கு மிகச் சிறந்த முறை என்பதே எஸ் டப்ளியு. ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்களின் கருத்தாகும். அவர் அத்துடன் நின்றுவிடவில்லை; பத்திரிகைகளுக்கு 6 கடிதங்கள் எழுதியதோடு அவர் நின்றுவிடவில்லை. நான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து இப்போது இங்கு கண்டியில் உரையாற்றுவதுபோல, அவர் யாழ்ப்பாணம் சென்று ஓர் உரை ஆற்றினார்; யாழ்ப்பாணத்திற்குச் சென்று சமஸ்டி முறையை ஆதரித்து உரையாற்றினார். 1926 இல் அவர் சமஸ்டி எண்ணத்தை யாழ்ப்பாணத்தில் விதைக்கமுயன்றார். உண்மையில் யாழ்ப்பாணம் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

இராச்சிய சபைக்கான 1931 ஆம் ஆண்டு தேர்தலில் ஹெண்டி பிரேமநாயகம் தலைமையிலான யாழ்ப்பாண இளைஞர் பேரவை ஒரு “பூரண சுய இராஜ்சியத்தை” கோரியது. “எங்களால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கைக்கு பூரண சுதந்திரம். பூரண சுயராச்சியம்” என்று அவர்கள் கூறி, தேர்தலை பகிஸ்கரித்தார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து ஒருவர்கூட போட்டியிடாத அளவிற்கு அவர்கள் தேர்தலைப் பகிஸ்கரித்தார்கள். யாரும் போட்டியிடுவதற்கு துணியவிலைலை. எனவே யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பிரதிநிதி இல்லாமலே இராச்சிய சபை இருந்தது. எனவே, எஸ். டப்ளியு. ஆர். டீ. பண்டாரநாய்க்கவின் சமஸ்டி கருத்து 1920 களிலும் 1930 களிலும் யாழ்ப்பாணத்தில் முழுமையாக நிராகரிக்கப்பட்டது.

1931 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு வந்தபோது கண்டித் தலைவர்கள் இலங்கைக்கு ஒரு சமஸ்டி அரசியலமைப்பிற்கான கருத்தினை முன்வைத்தனர் என்பது உங்களுக்குத் தெரியும். பிந்திய 1940களில் சோல்பறி ஆணைக்குழுவிலும் இக்கருத்து மீண்டும் எடுத்துரைகக்ப்பட்டது. இலங்கைக்கு ஒரு சமஸ்டி அரசியலமைப்பகைக் கோரி அப்போது கண்டிய லீக் எழுத்து கருத்துச் சமர்பபணமொன்றை மேற்கொண்டது. ஆனால் 1940களில் சமஸ்டி முறையே இத்தீவிற்கு மிகப் பொருத்தமான முறை என்று கூறியது கண்டி அறிஞர்கள் மாத்திரமல்ல. 1944 இல் இலங்கைக் கம்யூனிசக் கட்சியும் இலங்கைக்கு ஒரு சமஸ்டி அரசியலமைப்பு இருக்கவேண்டுமெனக் கூறி தீர்மானமொன்றை நிறைவேற்றியது. இலங்கையில் முதலில் ஒரு சமஸ்டி ஏற்றபாட்டைக் கோரிய முதலாவது அரசியல் கட்சி அதுதான். தழிழரசுக் கட்சியல்ல. தமிழரசுக் கட்சிப் பிறப்பதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்னரே 1944 இல் ஒரு சமஸ்டி அரசியலமைப்கைக் கோரி தீரானமொன்றை நிறைவேற்றியது இலங்கை கம்யூனிசக் கட்சிதான். கெனமன் - வைத்தியலிங்கம் முன்மொழிவு அச்சமஸ்டி ஏற்பாடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பாக விளக்கமான ஆலோசனைகளைக் கொண்டிருந்தது.

அக்காலப்பகுதியில் தமிழர் கோரிக்கை மிகவும் யதார்த்தமற்றதாக, ஏன் நியாயமற்றதாகக்கூட இருந்தது. மகாராணியின் சட்டத்தரணி திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது என்று அறியப்பட்ட சம பிரதிநிதித்துவத்தைக் கோரினார். முன்னைய நிகழ்வுகள் பற்றிய புரிந்துணர்வைக்கொண்டு அது ஒரு நியாயமற்ற, நடைமுறைச் சாத்தியமற்ற முன்மொழிவு என்று என்னால் கூறமுடியம்.

ஒருவேளை அதன் காரணமாகவோ என்னவோ, இலங்கை சுதந்திர கட்டளை 1947 இல் பிரித்தானியாவில் நிறைவேற்றப்படடது. எமது முதலாவது அரசியலமைப்பு இலங்கையில் நிறைவேற்றப்படவில்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். அது பக்கிங்ஹாம் மாளிகையில் நிறைவேற்றப்பட்டது. இத்தீவினை ஒரே அலகாக வைத்திருப்பதற்கான தீர்மானம் பிரித்தானியாவில் மேற்கொள்ளப்பட்டது போலவே, சுதந்திர இலங்கையில் எமக்குக் கிடைத்த முதலாவது அரசியலமைப்பும் சபையின் ஒரு கட்டளையாக (order-in-council) பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. கண்டியிலிருந்து மாத்திரம் வந்த சமஸ்டி கருத்தினை நிராகரித்து அது நிறைவேற்றப்பட்டது. அப்போது தமிழ் தலைவர்கள் ஒரு சமஸ்டி ஏற்பாட்டினை கோரியிருப்பின், அது வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால் அது நடைபெறவில்லை. வேறு சமூகங்களுக்கு வழங்கப்படாத குறிப்பிட்ட நன்மைகளை அல்லது சலுகைகளை வழங்குவதற்கு அல்லது வேறு சமூகம் அனுபவிக்கும் ஒரு குறிப்பிட்ட சலுகையை பிற சமூகமொன்றிடமிருந்து பறிப்பதற்கு சட்டங்களை ஆக்குவதற்கான பாராளுமன்றத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்திய ஒரு பாதுகாப்பு பிரிவு 29 இல் இருந்த போதிலும், சாதாரண பெரும்பான்மை ஆட்சியைக் கொண்ட ஒரு சாதாரண அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டது. பிரிவு 29 இல் வழங்கப்பட்ட பாதுகாப்பு முழுக்க முழுக்க பயனற்றதாகிப் போனது. ஏனெனில், பிரசா உரிமைச் சட்டம்தான் 1949 ஆம் ஆண்டு சுதந்திர இலங்கையில் முதலில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுள் ஒன்றாக இருந்தது. அது பயனற்றது என நான் ஏன் கூறுகிறேன்? ஏனெனில், (எத்தனை உறுப்பினர்கள் என்று எனக்கு சரியாகத் தெரியாது ஆனால்) நூறுக்குக் குறைவான உறுப்பினர்களைக் கொண்டிருந்த முதலாவது பாராளுமன்றத்தின் ஏழு உறுப்பினர்கள் மலையக தமிழ் சமூகத்தைச் சார்ந்தவர்களாவர். பிரசா உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது, பாராளுமன்றத்தில் இருந்த அந்த ஏழு உறுப்பினர்கள் அடங்கலாக அவர்கள் அனைவருமே தமது பிரசா உரிமையை இழந்தனர். எனவே, பிரிவு 29 முழுமையாக பயனற்றதாகிப் போனது. ஏனெனில், வெறுமனே ஏதோ ஒரு சலுகையல்ல, ஒரு நாட்டின் குடித்துவத்தின் அடிப்படை அம்சமே நிறைவேற்றப்பட்ட ஒரு சாதாரண சட்டத்தினால் இழக்கப்பட்டது. "இந்திய – பாகிஸ்தான் பிரசாவுரிமைச் சட்டம்" என்று அழைக்கப்படும் சட்டத்தைத் தொடர்ந்து - இவ்விரு சட்டங்களும் நிறைவேற்றப்பட்டதன் பின்னர்தான் இன்று நான் ஓர் உறுப்பினராக இருக்கும் தமிழரசுக் கட்சி 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் 18 ஆம் திகதி உதயமானது. இலங்கை தமிழரசுக் கட்சி (ITAK) என்பதே அதன் உத்தியோகபூர்வ பெயர். ஆனால், "சமஸ்டி கட்சி" என்ற பெயரையே அது எப்போதும் கொண்டிருந்துள்ளது. தேர்தல் முடிவுகளின்போது நீங்கள் அதனை FP என்றுதான் காண்பீர்கள். உண்மையில் அதன் உத்தியோகபூர்வ பெயர் அதுவல்ல. எனினும், "சமஸ்டிக் கட்சி" என்றே

அது எப்போதும் அழைக்கப்படுகிறது. 1951 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் திருகோணமலையில் நடைபெற்ற அதன் முதலாவது மாநாட்டில் அது சமஸ்டி ஏற்பாடு ஒன்றைக் கோரும் தீர்மானமொன்றை நிறைவேற்றியது.

1956 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தமிழரசுக் கட்சி தமிழ் பகுதிகளில் எல்லாத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளது. முன்னர் அது அனைத்துத் தமிழ் பேசும் பகுதிகளிலும் வெற்றி பெற்றது. ஆனால், 1970 களிலிருந்து எல்லாத் தமிழ் பகுதிகளிலுமாவது வெற்றி பெற்றுள்ளது. எனவே, 1956 ஆம் ஆண்டிலிருந்து இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களின் ஜனநாயகத் தீர்ப்பு ஒரு சமஸ்டி ஏற்பாட்டிற்கானதாகவே இருந்து வருகிறது.

இடையில், 1976 ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் இணைந்து தமிழரசுக் கட்சி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை உருவாக்கி தனிநாடு ஒன்றுக்கான கோரிக்கையை முன்வைத்தபோது ஒரு மாறுதல் இருந்தது. 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஏறத்தாழ 500 வாக்குகளால் தாங்கள் தோற்ற கிழக்கிலுள்ள கல்குடா என்ற ஒரு தொகுதியைத் தவிர ஏனைய எல்லாத் தமிழ் பகுதிகளிலிருந்தும் வழங்கப்பட்ட ஒரு மக்கள் ஆணை இருந்தது. ஏனைய எல்லாத் தமிழ் பகுதிகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றி பெற்றது.

இப்போது நான் கடந்த காலத்தின் பக்கம் திரும்பிச் செல்கிறேன். தமிழரசுக்கட்சி 1957 இல் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி, 1956 ஆம் ஆண்டு தேர்தலிலும் அதற்கப் பின்னர் வந்த தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர், அது இந்த நாட்டின் பல தலைவர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது. எஸ்.டப்ளியு.ஆர்.டீ.பண்டாரநாயக்க சமஸ்டிக் கருத்தை ஆதரித்து எழுதி முப்பத்தொரு ஆண்டுகளின் பின்னர் 1957 ஆம் ஆண்டில் அதே எஸ்.டப்ளியு.ஆர்.டீ.பண்டாரநாயக்கவோடு பண்டா – செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. பண்டாரநாயக்க தனது ரோஸ்மீட் பிளேஸ் வீட்டிற்கு வெளியே வந்து, அவ்வொப்பந்தத்தை கிழித்தெறிந்து "என்னால் இதனை அமுல்படுத்த முடியாது" என்று கூறியது உங்கள் அனைவருக்கும் தெரியும். 85 வயதுடைய ஒரு சிரேஷ்ட பௌத்த பிக்குவை நான் சந்தித்தேன். ரோஸ்மீட் பிளேசில் பண்டாரநாயக்காவின் வதிவிடத்திற்கு முன்னே அமர்ந்து அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட வேண்டுமென கோரியவர்களுள் தானும் ஒருவர் என்று அவர் என்னிடம் கூறினார். மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு முன்னர் இதனை என்னிடம் கூறினார். ஓர் இளம் பிக்குவாக "நான் எவ்வளவு பெரிய தவறைச் செய்தேன் என்பதை இப்போது உணர்கிறேன்" என்று அவர் என்னிடம் கூறினார். எவ்வாறாயினும், அது இரத்துச் செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டமைக்காகவோ அல்லது தமிழ் மொழியின் நியாயமான பாவனைக்கு இணங்கியமைக்காகவோ என்னவோ, பண்டாரநாயக்கவும் கொல்லப்பட்டார்.

சோல்பரி அரசியலமைப்பின் பிரிவு 29 ஐ நாம் பார்த்தால் அது தயாரிக்கப்பட்ட காலத்தில் 29ஆம் பிரிவினால் தடை செய்யப்படும் சட்ட வகைகளுக்கான உதாரணங்களைத் தருமாறு அவர்கள் கேட்டிருந்தால், அரச மொழிகள் சட்டம் - வேறு சமூகங்களுக்கு இல்லாத

சலுகைகளை ஒரு சமூகத்திற்கு வழங்குதல் - என்று சுலபமாகக் கூறியிருப்பார்கள். தெளிவாக தடை செய்யப்பட்டது. எனினும் அது நிறைவேற்றப்பட்டது. எத்தனை சட்ட வாதங்களும் பயனளிக்கவில்லை.

அதன்பின்னர் தமிழரசுக்கட்சி 1965 ஆம் ஆண்டு டட்லி சேனாநாயக்கவோடு ஓர் ஒப்பந்தம் செய்ததோடு டட்லி சேனாநாயக்கவின் தேசிய அரசாங்கத்திலும் இணைந்து கொண்டது. இராணியின் சட்டத்தணி திரு. எம். திருச்செல்வம் ஒரு செனட் சபை அமைச்சரானார். ஆனால் மூன்று ஆண்டுகளில் ‘‘என்னால் இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த முடியாது’’ என்று திரு. சேனாநாயக்க கூறியபோது, திரு.திருச்செல்வம் இராஜினாமாச் செய்தார்; தமிழரசுக் கட்சி அரசாங்கத்தைவிட்டு விலகியது.

எனவே, இரண்டு வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த இந்நாட்டின் இரண்டு பிரதம மந்திரிகளுடன் செய்து கொள்ளப்பட்ட இரண்டு ஒப்பந்தங்கள் ஒரு தலைப்பட்சமாக இரத்து செய்யப்பட்டன. அவ்விரு ஒப்பந்தங்களும் சமஸ்டி ஏற்பாட்டிற்கு வகை செய்யவில்லை. அவை ‘‘சமஸ்டி’’ என்று கூறவே இல்லை. எனினும், தமிழரசுக் கட்சி முதலில் 1956 ஆம் ஆண்டு பிராந்திய சபைகள் விடயத்திலும் 1965 ஆம் ஆண்டு மாவடடச் சபைகள் விடயத்திலும் விட்டுக் கொடுப்புகள் செய்ய தயாராக இருந்தது.

அவ்விரு தோல்விகளுக்குப் பின்னர் 1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வந்தது. ஆதில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் மூன்றிலிரு பெரும்பான்யோடு ஒரு மக்களாணை கிடைக்கப்பெற்றது. எனவே அவர்கள் சொந்த மண்ணிலிருந்தான அரசியலமைப்பு எனப் பொருள்படும் ஒரு குடியரசு அரசியலமைப்பை வரையத் தொடங்கினர்.

எமது அயல் நாடான இந்தியாவும் 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. அதன் பின்னர் உடனடியாக அவர்கள் பிரித்தானியவிலிருந்து ஓர் அரசியலைப்பைப் பெற்றுக்கொள்ளவில்லை. இந்தியாவிற்கு பிரித்தானியவினால் எந்த அரசியலமைப்பும் வழங்கப்படவில்லை. தமது அரசியலமைப்பை தாமே வரைந்து கொள்ளுமாறு அவர்களுக்குக் கூறப்பட்டது. எனவே, 1947 ஒகஸ்டிலிருந்து 1950 ஜனவரிவரை இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்குச் சற்று அதிக காலம் இந்தியாவில் “தீண்டத் தகாதவர்கள்” என்று அழைக்கப்படும் சமூகத்தின் தலைவரான கலாநிதி பீ. அம்பேத்கார் தலைமையிலான அரசியலமைப்புப் பேரவை மூலம் அவர்கள் தமது அரசியலமைப்பை வரைந்தனர். எனவே அங்கு வித்தியாசத்தைப் பாருங்கள். சுதந்திர இந்தியவிற்கான அரசியலமைப்பை வரைவதற்கான அரசியலமைப்புப் பேரவைக்கு அவர்கள் யாரை தலைவராக்கினார்கள்? சிறுபான்மையில் ஒரு சிறுபான்யினரான ஒரு “தீண்டத்தகாதவர்” இந்தியாவில் அரசியலமைப்பு பேரவையின் தலைவராக்கப்படடார்; 1950 ஆம் ஆண்டு அவர்கள் அவ்வரசியலமைப்பை நிறைவேறறினர். அது ஒரு மதச்சார்பற்ற அரசியலமைப்பு. அது மொழிவாரி மாநிலங்களுக்கு ஏற்பாடு செய்தது. மொழிவாரி மாநிலங்கள் என்பதே அதன் எண்ணக்கரு. எனவே வெவ்வேறு மொழிக்

குழுக்களுக்கு தன்னாதிக்கம் வழங்கப்பட்டது. அது சமஸ்டி என்று அழைக்கப்படவில்லை. இந்திய அலசியலமைப்பு அதனை “ஒற்றையாட்சி” என்றோ அல்லது “சமஸ்டி” என்றோ விபரிக்கவில்லை. அது “இந்திய ஒன்றியம்” (Union of India) என்று அழைக்கப்படுகிறது. பதின்மூன்று மொழிகள் இந்தியாவின் உத்தியோகபூர்வ மொழிகளாக ஆக்கப்பட்டன. அது நடந்தது 1950 இல். 1965 இல் சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து சென்றபோது தமிழ் அடங்கலாக நான்கு மொழிகள் சிங்கப்பூரின் உத்தியோகபூர்வ மொழிகளாக்கப்பட்டன. எனினும், இம் முற்போக்கு நடவடிக்கைகளுக்கு இடையில் இருந்துகொண்டு, 1956 ஆம் ஆண்டில் நாம் சிங்களத்தை இந்த நாட்டின் ஒரே உத்தியோபூர்வ மொழியாக ஆக்கினோம். நான்கு மொழிகளையோ அல்லது பதின்மூன்று மொழிகளையோ நாம் உத்தியோகபூரவ மொழிகளாக ஆக்கவேண்டியிருக்கவில்லை. நாம் இரண்டு மொழிகளையே உத்தியோகபூர்வ மொழிகளாக ஆக்க வேண்டியிருந்தது.

1970 முதல் 1972 வரையிலான நடவடிக்கை 1947 ஆம் ஆண்டிற்கும் 1950 ஆம் ஆண்டிற்குமிடையே இந்தியாவில் இடம்பெற்றதை பிரதிபலிக்கும் ஒன்றாக இருக்கவில்லை. ஒரு கட்சியே ஆதிக்கம் செலுத்தியது. 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் ஐதேக ஆதரவுகூட இருக்கவில்லை. முன்வைக்கப்பட்ட அடிப்படை தீர்மானங்களுக்கு தமிழரசுக் கட்சி ஒரு சில கோரிக்கைகளை முன்வைத்தது. எனவே முதற் தடவையாக பௌத்த மதத்திற்கு முதலிடம் வழங்கப்பபட்டது – எனவே மதச் சமத்துவம் இல்லை. முதற் தடவையாக (1956 ஒரு சாதாரண சட்டமாகவே இருந்தது) ˙ சிங்கள மொழிக்கு அரசியலமைப்பிலேயே அரச கரும மொழி அந்தஸ்து வழங்கப்பட்டது – எனவே இந்தத் தீவில் வாழ்ந்த இனக் குழுக்கள் மத்தியில் சமத்துவம் இல்லை. அடிப்படைத் தீர்மானங்களுக்கு தமிழரசுக் கட்சியனால் முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு திருத்தமும் ஒரு பெரும்பான்மை வாக்குகனினால் தோற்கடிக்கப்பட்டது. 86-14, 85-13, 85-16: அவைகள்தான் அரசியலமைப்புப் பேரவையில் அளிக்கப்பட்ட வாக்குகள். ஆறு தீர்மானங்களும் தோற்கடிக்கப்பட்டதும், திரு. எஸ்.ஜே.வீ. செல்வநாயகம் அரசியலமைப்புப் பேரவையில் அறிவித்தார்: மிகவும் அடிப்படையான கோரிக்கைகூட - அவர்கள் முன்மொழிந்த தீர்மானங்களுள் கடைசித் தீர்மானம் சமஸ்டி பற்றியதல்ல, பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பானதுகூட அல்ல. அது கச்சேரிகளை தெரிவு செய்யப்பட்ட அமைப்புகளாக ஆக்குவதாகும். அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த திரு வீ. தர்மலிங்கம் “உங்களுக்கு அதனை சமஸ்டி ஆக்க முடியாவிட்டால், மாகாணங்களுக்கு அல்லது மாவட்டங்களுக்குக்கூட நாங்கள் விரும்பும் வகையில் அதிகாரரங்களைப் பகிர்நதளிக்கமுடியாவிட்டால், ஐக்கிய முன்னணி தேர்தல விஞ்ஞாபனம் கச்சசேரிகளை தெரிவு செய்யப்பட்ட அமைப்புகளாக ஆக்குவதாகக் கூறியது. கச்சேரிகள் தெரிவு செய்யப்பட்ட அமைப்புகளாக மாறும் என்று உங்களுடைய தேர்தல் விஞ்ஞானமே கூறகின்றது. அதனைச் செய்யுங்கள்” என்று கூறினார். அதுதான் 86 – 14 அல்லது அதுபோன்ற ஒரு விகித்தில் தோற்கடிக்கப்பட்ட கடைசி தீர்மானமாகும். அவர்கள் தமது தேர்தல்

மக்களாணையையே தோற்கடித்தார்கள். அப்போதுதான், "நாங்கள் எல்லாவற்றையும் முயற்சித்துப் பார்த்துவிட்டோம். நான் இரண்டு பிரதம மந்திரிகளோடு இரண்டு ஒப்பந்தங்கள் செய்துகொண்டேன். ஆவை இரண்டும் ஒருதலைப்பட்சமாக கிழித்தெறியபப்பட்டன. நாங்கள் அரசியலமைப்புப் பேரவையில் பங்குபற்றி, மிகவும் நியாயமான ஆலோசனைகளை முன்வைத்தோம். அவற்றுள் இறுதியானது எங்களுடையதுகூட அல்ல. அது உங்களுடைய ஆலோசனை, ஆனால் நீங்கள் அதனையும் மறுத்துவிட்டீர்கள். எனவே இந்த அரசியலமைப்புக் கலந்தாலோசனைகளில் நாங்கள் இனிமேலும் பங்குபற்றமாட்டோம்." என்று திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கூறினார். "நாங்கள் வெளிநடப்புச் செய்து இதனை ஒரு நாடகமாக்கமாட்டோம். நாளை தொடக்கம் நாங்கள் இங்கு வரமாட்டோம்" எனறு அவர் மேலும் கூறினார். இவ்வாறுதான் தமிழரசுக் கட்சி 1970 இல் அரசியலமைப்பு ஆக்கும் நடைமுறையினின்றும் விலகிச் சென்றது.

அதன் பின்னர் திரு செல்வநாயகம் தனது பாராளுமன்று ஆசனத்தை இராஜிநாமாச் செய்து இடைத் தேர்தலொன்றை நடத்துமாறு அரசாங்கத்திற்குச் சவால்விட்டார். அந்த இடைத்தேர்தல் இரண்டரை ஆண்டுகள் தாமதப்படுத்தப்பட்டு இறுதியில் 1975 இல் நடத்தப்பட்டது; அவர் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர் சரித்த குறிப்பிட்ட, அந்தக் காலத்தில் தமிழ் அரசியலில் புகழ்பூத்த பேராளராகத் திகழ்ந்த பேராசிரியர் சீ. சுந்தரலிங்கம் ஆவார். அவர்தான் 1950களில் தனிநாட்டு எண்ணத்தை ஆதரித்த முதல் மனிதராவார். அவர் ஒரு சிறு நூல் எழுதினார் - ஈழம் - "எய்ழம்" என்று வித்தியாசமான முறையில் எழுதப்பட்டது – சுதந்திரப் போராட்டத்தின் ஆரம்பம். அவர் சவால் விடுத்தார் …. மன்னிக்கவும் ….. சுந்தரலிங்கம் போட்டியிடவில்லை. கம்யூனிசக் கட்சியின் வி. பொன்னம்பலம்தான் போட்டியிட்டார். சுந்தரலிங்கமும் முன்னர், 1970 இல் என்று நினைககிறேன் திரு. செல்வநாயகத்தை எதிர்த்துப்போட்டியிட்டார். இவ்வாறுதான் பிரிவினைவாத இயக்கம் கால்கொண்டது. 1974 இல், தமிழர் ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டது; 1976 இல் தவிகூ வந்தது; 1977 இல் தனி நாட்டுக்கான மக்களாணை வழங்கப்பட்டது. இந்த நாட்டின் தழிழர்களுக்கு அரசியலமைப்பை ஆக்கும் நடைமுறையில் அவர்களுக்குரிய இடம் வழங்கப்படவில்லை என்பது அதன் பொருளாகும். அதுதான் முறைப்பாடாகும். பெரும்பான்மை வாக்கினைக்கொண்டு நீஙகள் எல்லாவற்றையும் நிராகரித்தீர்களானால், இந்த இடத்திற்குதான் நாங்கள் செல்வோம்.

எனது நண்பர் ஒருவர் கூறும் ஒரு கதை என்னிடம் உண்டு. நான் பல தடவைகள் அதனைக் கூறியிருக்கிறேன். இதனை முன்னர் நீங்கள் கேட்டிருந்தால் என்னை மன்னிக்கவும். நான்கு பிள்ளைகள் கொண்ட செல்வந்தக் குடும்பம் ஒன்று இருந்தது. பாடசாலை விடுமுறை காலத்தில் சுற்றுலா செல்லவேண்டுமென அவர்கள் தீர்மானித்தார்கள். ஒவ்வவொரு பாடசாலை விடுமுறையிலும் சுற்றுலாச் செல்லவேண்டுமென அவர்கள் தீர்மானித்தார்கள். அங்கு மூன்று

பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் இருந்தார்கள். பெண்பிள்ளைகள் கடற்கரைக்குச் செல்வதற்கு ஆர்வங்காட்டினார்கள். எனவே, "நாங்கள் கடற்கரைக்குச் செல்ல வேண்டும்" என்று அவர்கள் கூறினார்கள். சிறுவன் மலை ஏறுவதில் ஆர்வங்கொண்டிருந்தான். எனவே, "நாங்கள் மலைநாட்டிற்கு போவோம்" என்று அவன கூறினான். இந்தப் பூசலை அவர்களால் தீர்க்க முடியவில்லை. எனவே பெற்றோர் "நாங்கள் ஒரு ஜனநாயகக் குடும்பம். நாஙகள் ஒரு வாக்கெடுப்பு நடத்துவோம்" என்று கூறினார்கள். எனவே அவர்கள் கடற்கரைக்குச் சென்றார்கள். அடுத்த விடுமுறை வந்தது, அதே பிரச்சினை எழுந்தது. "நாங்கள் கடற்கைக்குத்தான் பேகவேண்டும்" என்று பெண்பிள்ளைகள் தலைகீழாக நின்றனர். ஒரு ஜனநாயகக் குடும்பமாக இருந்ததால் அவர்கள் வாக்கெடுப்பு நடத்தினார்கள். அவர்கள் இரண்டாவது முறையும் கற்கரைக்குப் போனார்கள். மூன்றாவது விடுமுறை வந்தபோது, " இரு முறை நாங்கள் அதைச் செய்துவிட்டோம். இம்முறையாவது நாங்கள் மலை நாட்டிற்குப் போகவேண்டும்" என்று சிறுவன் கூறினான். "இல்லை, இல்லை நாங்கள் ஒரு ஜனநாயகக் குடும்பம். பெரும்பான்மை விருப்பம் வெற்றிபெற வேண்டும். பெரும்பான்மை ஆட்சிதான் ஜனநாயகத்தின் உறைவிடம். எனவே நாங்கள் மீண்டும் கடற்கரைக்குப் போவோம்" என்று கூறினார்கள். சிறுவன் என்ன செய்வான்? அவன் சாப்பிட மறுக்கிறான் - அது ஒரு சத்தியாக் கிரக போராட்டாம். அவன் சாப்பிட மறுக்கிறான். "நான் சாப்பிட மாட்டேன்" என்று அவன் கூறுகின்றான் - எதிர்ப்பு. ஆனால் அது மீண்டும் மீண்டும் நடக்கிறது. அவன் என்ன செய்வான்? அவன் வீட்டில் தட்டுகளை உடைக்கத் தொடங்குகிறான் - வன்முறைக்குத் திரும்புகிறான்.

அதுதான் நடந்தது. அனைத்து ஜனநாயக முயற்சிகளும் நிராகரிக்கப்பட்டன; கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தகள்கூட இரத்துசெயயப்பட்டன. அரசியலமைப்புப் பேரவையில் அரசிலமைப்பைத் தயாரிக்கும் நடைமுறையில் மிக நியாயமான கோரிக்கைகளோடு பங்குபற்றல், மற்றத் தரப்பிலிருந்து வந்த ஆலோசனைகள் எல்லாம் நிரகரிக்கப்பட்டன. எனவே, "நீங்கள் எங்களை தேசிய வாழ்விலிருந்து விலக்கி வைத்துவிட்டீர்கள், எனவே எங்களை எங்கள் வழியில் செல்ல விடுங்கள்" என்று தமிழ் சமூகம் கூறியது. அதுதான் தனி அரசுக்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும். ஆனால், உண்மையில் இன்று நாங்கள் அதிலிருந்து வெகு தூரம் வந்துவிட்டோம்.

1987 இல், இன்றும் அமுலில் இருப்பதும் செல்லுபடியாவதுமான ஓர் இரு தரப்பு சர்வதேச உடன்படிக்கையான இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படடது. அது மாகாண சபைகளுக்கு ஏற்பாடு செய்தது. எனவே நாம் இன்று மாகாண சபைகளைக் கொண்டிருக்கிறோம் - அனைத்து மாகாணங்களுக்கும் ஒரு நியாயமானளவு அதிகாரப் பகிர்வு. தற்போதைய அரசியலமைப்பு ஆக்கும் செயற்பாடடில், வழிநடத்தல் குழுவில் …. நான் வழிநடத்தல் குழுவின் இணைத் தலைவர் அல்ல. பிரதம மந்திரிதான் வழிநடத்தல் குழுவின் தலைவர். கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்னவும் நானும் செயலகத்தை

கையாளும் முகாமைத்துவக் குழுவின் இணைத் தலைவர்கள…வந்து சமர்ப்பணங்களை மேற்கொள்ளுமாறு நாங்கள் அனைத்து முதலமைச்சர்களுக்கும் அழைப்பு விடுத்தோம். வடக்கு முதலமைச்சர் வரவில்லை. கிழக்கு மாகாண முதலமைச்சர் வரவில்லை. எனினும், ஏனைய ஏழு முதலமைச்சர்களும் அவ்வேழு மாகாண சபைகளின் எதிர்கட்சித் தலைவர்களும் வருகை தந்தார்கள். அந்த நேரத்தில் அவ்வேழு மாகாண சபைகளும் UPFA இன் கட்டுப்பாட்டில் இருந்தன. ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டுமென அவர்கள் அனைவரும் தமது சமர்ப்பணத்தில் கூறினர். உண்மையில் ஒரு முதலமைச்சர் ஆளுநர் பதவி அகற்றப்படவேண்டுமென்று விரும்பினார். “எங்களுக்கு ஓர் ஆளுநார் தேவையில்லை” என்று அவர் கூறினார். அவர்கள் அனைவரும் பொலீஸ் அதிகாரம் வேண்டுமென்றார்கள். அவர்கள் அனைவரும் காணி அதிகாரம் வேண்டுமென்றார்கள். இவை வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களாகும். இவையனைத்தும் பதியப்பட்டுள்ளன. எனவே, வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் அதிகாரப் பகிர்வு கோட்பாடுகள் விளக்கப்பட்டன. இவை அனைத்தும் தெற்கிலுள்ள ஏழு முதலமைச்சர்கள் மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள் ஆகியோரின் ஆலோசனைகளாகும் என்று கூறும் ஒரு குறிப்பு அதில் உள்ளது. எனவே தற்பேததைய நடைமுறையில் அதிகாரப் பகிர்வு தொடர்பாக வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் அடங்கியிருப்பது தெற்கிலிருந்து வந்த ஆலோசனைகளாகும்; வடக்கிலிருந்தோ கிழக்கிலிருந்தோ வந்தவையல்ல.

இன்று நாங்கள் ஓர் இடைப்பட்ட நிலையில் இருக்கிறோம். நடைபெற்ற நடைமுறைகள் உங்களுககுத் தெரியும் - 1993 இல் மங்கள முனசிங்க தெரிகுழு ஆலோசனைகள் இருந்தன. 1995 ஆம் ஆண்டிற்கும் 2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்குமிடையே சனாதபதி சந்திரிக்கா குமாரதுங்க காலத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு அரசியலமைப்பு சட்டமூலம் அடங்கலாக மூன்று தீர்வாலோசனைகள் இருந்தன. 2006 ஜூலை மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவையும் அதற்கு ஆலோசனை வழங்குவதற்காக வல்லுநர் குழுவொன்றையும் நிஜயமித்தார். 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அவற்றின் தொடக்கக்கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஓர் உரையாற்றினார். அதில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு இருக்கவேண்டுமென அவர் கூறினார். “மக்கள் தமது சொந்த பகுதிகளில் தமது தலைவிதியைத் தாமே கட்டுப்படுத்தவேண்டும்.” இவை அவரது வார்த்தைகள், என்னுடையவையல்ல. இருப்பினும், சர்வகட்சி பிரதிநிதிகள் குழ அறிக்கை அமுல்படுத்தப்படவில்லை; பல்லின வல்லுநர் குழுவின் அறிக்கையும் அமுல் படுத்தப்படவில்லை. எனவே, ஓர் இறுதி விளைவு தொடர்பில் கருத்தொருமைப்பாடு ஒன்று இருந்துள்ளது.

2015 ஜனவரியில், ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டபோதும் பின்னர் ஓகஸ்ட் மாதத்தில் புதிய பாராளுமன்றம் வந்தபோதும் அதன்பின்னர் வெகு துரிதமாக 2016 ஜனவரி 09 ஆம் திகதி அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஓர் அரசியலமைப்புச் சபையும்

பாராளுமன்றத்திலிருந்த அனைத்து அரசியல் கட்சிகளினதும் பிரதிதிதித்துவத்தோடு ஒரு வழிநடத்தல் குழுவும் உருவாக்கப்பட்டன. இந்த நடைமுறைகளில் நாங்கள் பொறுப்புடன் பங்குபற்றிவருகிறோம். ஏனெில், 1989 இல் தனி நாட்டுககான கோரிக்கையை நாங்கள் கைவிட்டுவிட்டோம் என்று தமிழ் அரசியல் கட்சிகள் வெளிப்படையாக அறிவித்தன. எனவே, ஓர் ஐக்கிய, பிரிபடாத மற்றும் பிரிக்கமுடியாத நாட்டிற்குள் - “பிரக்கமுடியாத” என்ற வார்ததையையும் நாங்கள் முன்வைத்துள்ளோம் - பேரினவாதம் தின வழக்கமாக இருக்காத ஒரு வழியில் அதிகாரப் பகிர்விற்கு நாங்கள் ஆலோசனை தெரிவித்துளளோம். இந்தத் தீவிலுள்ள வேறு சமூகங்களும் வேறு எவரையும் போல பெருமைகொண்ட இலங்கையர்களாக இருக்கும் அளவிற்கு தமக்குரிய அதிகாரப் பகிர்வைக் கொணடிருப்பார்கள். ஆனால் அது நடைபெறுவதற்கு சம அந்தஸ்து இருக்கவேண்டும். 70% அல்லது அதற்கு மேலான பெரும்பான்மையகைக் கொண்டிருப்பதாக தற்பெருமைகொள்ளும் ஒரு பெரும்பான்மை சமூகம் தனது நிலை தேய்வுறும் என்று அஞ்சத் தேவையில்லை. அது எளிதில் எதுவும் செய்துவிட முடியாத ஒரு கணிசமான பெரும்பான்மைாகும். அவர்கள் ஒரு பெரும்பான்மை சமூகம் என்பதில் ஏதேனும் அர்த்தம் இருக்கவேண்டும். அது, மத்திய சட்டவாக்கச் சபை ஆட்சியின் ஒரு சில துறைகளை – ஒரு சில துறைகளின் அதிகாரத்தை - நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரக் கொள்கை, வெளி விவகாரம் மற்றும் வேறு பல்வேறு விடயங்கள போன்ற முக்கிய துறைகளை தனக்கென வைத்தக்கொள்ளும் முழு நாட்டினதும் விவகாரங்களின் சிலவற்றைக் குறிக்கும். எனினும், சமூகங்களின் நாளாந்த விவகாரங்கள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளலானது, ஊவா மாகாணத்திற்கு அது மொனராகலை அல்லது பதுனையில் நடக்கலாம். கொழும்பு தீர்மானிக்கத்தேவைில்லை. வடக்கில் அது யாழ்ப்பாணத்தில் அல்லது வன்னியில் நடக்கலாம். கொழும்பு தீர்மானிக்கத்தேவைில்லை. அதிகாரப் பரவலாக்கம் என்பது, வேறுபட்டிருப்பதை இனங்காண்தல் நோக்கியதாக இருப்பதிலை. ஆனால் பிராந்தியங்களில் உள்ள மக்கள் தாங்களாகவே தீர்மானங்களை மேற்கெள்ளகூடியதாக அவர்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதாகும்.

.

எனவே, அந்த கருத்தோடுதான் நாங்கள் ஒரு மிகவும் ஆக்கபூர்வான வழியில் இந்த அரசியலமைப்பு தயாரிப்பு நடைமுறையில் இதுவரை பங்குபற்றியுள்ளோம். இதற்காக நாங்கள் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பெருமளவில் பாதிப்படைந்துள்ளோம். ததேகூ எந்தளவு பாதிப்படைந்துள்ளது என்பதை இப்பகுதியிலுள்ள பெரும்பாலனவர்கள் உணரவில்லை. 2013 இல், வட மாகாண சபைத் தேர்தலில் ததேகூ 78.9% வாக்குகளைப் பெற்றது – ஏறத்தாழ 80%. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் எங்களுக்கு 35% வாக்குகளே கிடைத்தன. நாங்கள் ஓர் அரசியலமைப்புத் தயாரிப்பு நடைமுறையில் பங்குபற்றுகின்றமையே இதற்கான ஒரே காரணமாகும். ஏனெனில் எமது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. எங்களுக்கு “துரோகிகள்” மற்றும் “மடையர்கள்” பட்டம் வழங்கப்படுகிறது. துரோகிகள் என்பதைவிட மடையர்கள் என்ற பட்டம். “1957 ஆம்

ஆண்டிலிருந்து இந்த நாட்டின் வரலாறு உங்களுக்குத் தெரியாதா? ஓப்பந்தங்கள்கூட கிழித்தெறியப்பட்டுள்ளன. இது ஒருநாளும் நடக்காது. நீஙகள் கற்பனை செய்கிறீர்கள், நீங்கள் மீண்டும் எங்களை ஏமாற்றுகின்றீர்கள்" என்று அவர்கள் எங்களிடம் கூறியவண்ணம் உள்ளனர். ஏதாவது நடைபெறும் என்ற நேர்மையான நம்பிக்கையோடு நாங்கள் பங்குபற்றினோம். அது நடைபெற வேண்டும். இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிடில் இந்த நாட்டிற்கு விமோசனம் கிடையாது. நான் அதனை மீண்டும் கூறுகின்றேன். இந்த நாட்டின் எல்லா சமூகங்களுக்குமிடையே ஒரு இணக்கப்பாடு இல்லையேல், இந்த நாட்டிற்கு விமோசனம் இல்லை. அது பௌத்தர்களுக்கு, சிங்களவர்களுக்கு, ஏற்றக்கொள்ளதக்கதாக இருக்கவேண்டும். அது இந்துக்களுக்கு, தமிழருக்கு, ஏறறுக்கொள்ளத் தக்கதாக இருக்கவேண்டும். அது முஸ்லிம் மக்களுக்கும் எல்லா மக்களுக்கும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கவேண்டும் - 50 ஆண்டுகளுக்கு முன்னர் அது இந்தியாவில் சாத்தியமானதுபோல.

எமது அலசியலமைப்பு எப்படியிருக்கவேண்டும் என்பது தொடர்பாக இந்த நாட்டின் அனைத்து மக்களும இணங்கி வரவேண்டும். அந்த இணக்கப்பாட்டை எட்டுவது முடியாததொன்றல்ல. ஏனெனில், நாம் அனைவரும் இணங்கவில்லையெனில் - அதுதான் நாம் ஒரு நாடாக வாழ்வதற்கு இணங்கும் சமூக ஒப்பந்தமாகும். அந்த ஒப்பந்தம் இல்லையென்றால், நாடு ஒரே அமைப்பாக இருப்பதென்பது பாரதூரமான ஆபத்தை எதிர்நோக்கும். யாரையும் எச்சரிப்பதற்கோ அல்லது பிரிவினைவாதம் உருவாகும் என்று அச்சுறுத்துவதற்கோ நான் இதனைக் கூறவில்லை. நான் கூறுவது யதார்த்தம் என்று எண்ணுகின்றேன். எனவே நம் எல்லோருக்காகவும் நாம் அந்தக் கருத்தொருமைப்பாட்டை அடைவதற்குப் பாடுபட வேண்டும். அதனை எய்துவது சிரமமானதல்ல. ஏழு தென் மாகாணங்கள் ஏதோவொன்றை கோரியிருப்பின், அது வழங்கப்படுமாயின், நாங்கள் இன்று அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வோம். ஆந்தக் கருத்தொருமைப்பாட்டை அடைவது எவ்வளவு எளிதானது என்பது அதுதான். ஆனால் நாங்கள் இன்று - இன்றும் நாளையும் - கடந்த இரண்டரை ஆண்டு செயற்பாடு முழுதும் சிதைந்துவிடுமோ என்ற தீர்க்கமான கட்டத்தில் இருக்கிறோம். எமது நாட்டின் துரதிஸ்ட வரலாறு மீணடும் நிகழக்கூடாது என்று நாங்கள் எண்ணுகின்றோம். ஆனால் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக நாளைவரை நாங்கள் காத்திருப்போம். நன்றி.